| Page No.6 | |
|---|---|
| **<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>** | |
| நாள் | 20.03.2025 |
| O.S. No. | 157/2004 |
| பி.வா.சா.2 | ஜெயா என்கிற விஜயலட்சுமி |

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 20–ம் நாள் ஜெயா என்கிற விஜயலட்சுமி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு(2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயா என்கிற விஜயலட்சுமி | சமயம் | : |
| தந்தை பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | வயது | : |
| தாலூக்கா | : | | | |

<u>முதல் விசாரணையின் தொடர்ச்சி –</u>

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன. 1) 15.06.1974ஆம் தேதியிட்ட பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி..சா.ஆ.3**, 2) 15.06.1999ஆம் தேதியிட்ட மின்வாரிய ரசீதின் அசல் **பி.சா.ஆ.4**, 3) சொத்து வரி ரசீதுகளின் அசல்கள் **பி.சா.ஆ.5** வரிசைகள் (எண்ணிக்கைகள் –7) 4) சொத்துவரி கேட்பு அறிவிப்பின் அசல் **பி.சா.ஆ.6** வரிசகைகள் (எண்ணிக்கைகள் –7), 5) 27.12.2022ஆம் தேதியிட்ட நிலஅளவை பிரிவு வழங்கிய சான்றிதழின் பதிவிறக்க நகல் (QR Code Verified) **பி.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>12ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

1) 12ஆம் பிரதிவாதி கிரையம் வாங்குவதற்கு முன்பே வழக்கு 1வது அயிட்ட சொத்தில் வாடகை தாரராக 20 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வந்தார் என்றால் சரிதான். 17.11.2004ஆம் தேதியில், ராமசாமி என்பவரிடம் வழக்கு 1வது அயிட்ட சொத்தை 12ஆம் பிரதிவாதி கிரையம் பெற்று, உரிமையாளராக மேற்படி சொத்தில் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து

வருகிறார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் ராமசாமி எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.சா.ஆ.8**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(14ஆம் பிரதிவாதி மற்றும் வாதியின் வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**